18.06.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஓ.எஸ்.எண். 143 /2019 ) திரு.சுப்பாராஜ்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –

1) நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் தாவாச்சொத்தையும் இதர சொத்துக்களையும் சங்கரப்ப நாயக்கரின் வாரீசுகள் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற 33 செண்டை பிரிவின்றி என்று கிரையம் பெறவில்லை என்றால் நான்குமால்கள் விவரித்து கிரையம் பெற்றுள்ளேன். அச்சம்மாள் என்பவர் எனது சகோதரர் முருகனின் மனைவி என்றால் சரிதான். வா.சா.ஆ.4 என்பது அச்சம்மாள் எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் எழுதிக்கொடுத்த அச்சம்மாளுக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனது தாயார் வழியில் பூர்வீகமாகப்பாத்தியப்பட்டு என் பெயருக்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டது என்று கண்டுள்ளது. அச்சம்மாளின் அம்மா பெயர் என்னவென்றால் ஞாபகமில்லை. நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் மின் இணைப்பு எண் என்னவென்று காட்டப்பட்டுள்ளது என்றால் மின் இணைப்பு எண்.131 என்று காட்டப்பட்டுள்ளது. தற்போது காண்பிக்கப்படும் மின் இணைப்பு எண். 131 மின்கட்டண ரசீதில் யாருடைய பெயர் உள்ளது என்றால் ராமசுப்பு பெயரில் உள்ளது. ஆனால் இந்த ரசீதில் கண்டுள்ள ராமசுப்பும், வழக்கில் கண்டுள்ள ராமசுப்பும் வேறு வேறு நபர்கள் ஆவார்கள். பத்திரத்தில் கண்ட மின்இணைபு 131 ரசீது இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது அந்த மின் இணைப்பு ரசீது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கிரையம் பெற்ற 33 செண்டு சொத்து மின் இணைப்பு எண்.131ல் கண்ட கிணற்றிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்குரியது என்றால் சரிதான் ஆனால் மின்இணைப்பு கொண்ட கிணறு நான் கிரையம் பெற்ற சொத்தில் உள்ளதா என்று தெரியாது. மின் இணைப்பு எண்.131க்கும் சங்கரப்ப நாயக்கரின் வாரிசுகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் தவறு சம்பந்தம் உண்டு. வழக்கு சொத்துக்கும் மின் இணைப்பு 131 கிணற்றுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் உண்மையல்ல. நான் பத்திர எழுத்தரா என்றால் இல்லை. எனது கிரைய பத்திரம் தயார் செய்து கொடுத்தவர் யார் என்றால் பத்திர எழுத்தர் கார்த்திகா.

2) நான் கிரையம் பெற்ற பத்திர எழுத்தராக நான் தான் எழுதியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் குருசாமி, மனோகர். குருசாமி யார் என்றால் எனது சகோதரர்.

மனோகர் யார் என்றால் பக்கத்துவீட்டு பையன். எனது அக்கா மகன் பெயர் என்னவென்றால் மனேர்கரன். பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளவர்களுக்கு தந்தை பெயரோ, முகவரியோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.302/1ல் ஏக்கர் 1 செண்டு 32 க்கு கிழக்கே ராமசுப்பு மகன் நாராயணசாமி, மற்றும் சின்னச்சாமி நிலம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது எனக்கு நான் கிரையம் பெற்ற 33 செண்டுக்கு மட்டும் தான் தெரியும். எனது எதிர்வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ நான் கிரையம் பெற்ற சொத்து திருமதி.அச்சம்மாள் பாகத்திற்கு கிடைத்த சொத்து என்று கட்சி செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.302/1ல் தென்புறம் நாராயணசாமி பாகதத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை நாராயணசாமி நாயக்கரோ அவர்களின் வாரிசுகளோ யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை என்றால் அவருக்கு அங்கு சொத்தே கிடையாது. எனக்கு கிரையம் கொடுத்த அச்சம்மாளின் தாய், தந்தையர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அவர்களிடம் இருந்து கிரையம் தான் பெற்றுள்ளேன் தாய், தந்தையர் பெயர் எனக்கு தெரியாது. எனது நிருபண வாக்குமூலத்தில் சங்கரப்ப நாயக்கர் வாரிசுகள் தாவாச்சொத்தையும், வேறு சொத்துக்களையும் அனுபவத்து வருவதாக சொல்லியுள்ளது வாரிசுகளுக்கு எவ்வாறு அனுபவித்து வருவதாக சொல்லுகிறேன் என்றால் என் வயதுடைய அவரது வாரிசுகள் அனுபவம் செய்து வருவதால் சொல்லுகிறேன். உரிமையியல் நீதிமன்றம், மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் என்மீது உள்ளது என்றால் சாட்சி கையொப்பம் போட்டதாக வழக்குகள் உள்ளது குற்றவியல் வழக்கு, போர்ஜரி வழக்கு உள்ளது. இந்நீதிமன்றத்தில அ.வ.எண்.5/2021 வழக்கு நிலுவையில் உள்ளது. எனது நிருபண வாக்குமூலத்தில் திரு.ஜெகதீசன் குடும்பத்தாருக்கு 10 செண்டு நிலம் பாத்தியம் உள்ளதாக சொல்லியுள்ளதற்கு எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு அந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. சர்வே எண்.302/1ல் அச்சம்மாளுக்கு எவ்வித பாத்தியமும், உரிமையும் கிடையாது என்றும் அதனால் எனக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.4 கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் தவறு நான் சரியாகத்தான் வாங்கியுள்ளேன். 3 முதல் 7 பிரதிவாதிகளுக்கு தபசில் சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது என்றும் அவர்கள் பெயர் பட்டாவில் தவறாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது 3 வது தபசில் கண்ட சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால்

சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் அச்சம்மாளிடம் பெற்ற கிரையம் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. அய்யலுசாமி பெயரில் பட்டா இல்லாததால் அவருக்கு சொத்தில் உரிமையில்லை என்று கூறுகிறேன் என்றால் அவர் பெயருக்கு உரிமையில்லை. நான் எனது பத்திரத்தில் காட்டியுள்ள 33 செண்டுக்கு தவறான நான்கு மால்கள் காண்பித்து தாவா சர்வே எண்ணை மட்டும் மோசடியாக காட்டி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.06.2026.